LIBRARY
30 DEC 2011
Eastern University, Sri Lanka

## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட/முதலாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு – 2009/2010
(யூன் 2011)

# CC 1101 Introduction to Social Harmony and Sri Lankan Studies

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

**பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

**எழுத்துத் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.**

---

01.(அ) சமூக நல்லுறவு என்பதனால் நீர் கருதுவது யாது?
(05 புள்ளிகள்)

(ஆ) சமூக நல்லுறவைச் சீர்குலைக்கும் காரணிகளில் ஏதாவது ஐந்தினை பட்டியல்படுத்துக.
(05 புள்ளிகள்)

(இ) "ஆ" பிரிவில் பட்டியல் படுத்தப்பட்ட காரணிகளில் இரண்டினை சுருக்கமாக விளக்குக.
(05 புள்ளிகள்)

(ஈ) நீர் விளக்கிய மேற்படி இரு காரணிகளில் ஒன்றைத் தெரிந்து அது எவ்வகையில் சமூக நல்லுறவிற்குப் பங்கம் விளைவிக்கின்றது என்பதனை எடுத்துக்கூறுக.
(10 புள்ளிகள்)

02.(அ) நீர் ஒரு பல்கலைக்கழக மாணவன் என்ற நிலையில் உம்மால் முன்னெடுக்கக்கூடிய சமூக நல்லுறவுக்கான வழிமுறைகளில் ஐந்தினை பட்டியல்படுத்துக.
(05 புள்ளிகள்)

(ஆ) மேற்குறிப்பிட்ட காரணிகளில் இரண்டினை தெரிவுசெய்து அவற்றை சுருக்கமாக விளக்குக.
(05 புள்ளிகள்)

(இ) நீர் விளக்கிய இரு காரணிகளில் ஒன்றைத் தெரிந்து அதனூடாக நீர் எவ்வகையில் சமூக உறவினைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டினை முன்னெடுப்பீர் என எடுத்துக்காட்டுக.
(15 புள்ளிகள்)

03.(அ) உமக்குத் தெரிந்த மனித விழுமியங்களில் பத்தினை (10) பட்டியல்படுத்துக.
(05 புள்ளிகள்)

(ஆ) அவற்றுள் ஏதாவது இரண்டினைத் தெரிந்து அவை ஒவ்வொன்றும் சமூக நல்லுறவை மேம்படுத்தும் வகையில் எத்தகைய பங்களிப்பினைப் புரிகின்றன என்பதனை தகுந்த எடுத்துக் காட்டுகளின் வாயிலாக விளக்குக.
(20 புள்ளிகள்)

04.(அ) மண்ணரிப்பு என்றால் என்ன? (05 புள்ளிகள்)

(ஆ) மண்ணரிப்பின்போது மண்ணரிப்பு ஏற்படும் இடத்திலும் (on side) மண் சென்றடைகின்ற இடத்திலும் (off side) ஏற்படும் தாக்கங்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) இலங்கையில் மண்ணரிப்பு அதிகளவில் இடம்பெறும் பகுதிகளை குறிப்பிட்டு அவை ஏற்படுவதற்கான காரணங்கள், அவற்றை தடுப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்க.

(12 புள்ளிகள்)

05. "இலங்கையில் அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் காடுகள் அழிக்கப்படும் வீதம் அதிகரித்து வருகின்றது."

(அ) உலக காட்டியல் சேரவையின் 07ஆவது பிரகடனத்தில் காட்டின் பயன்பாடு பற்றி தெரிவிக்கப்பட்ட கருத்தினை குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் காடழிப்பானது இடம் பெற்றமைக்கான காரணங்களையும், அவற்றினால் ஏற்பட்டுவரும் தாக்கங்களையும் விளக்குக.

(20 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்பு எழுதுக.

(அ) முருகைக்கற் பாறைகளும் இலங்கையின் கரையோரப் பாதுகாப்பும்
(ஆ) இலங்கையின் சனத்தொகைப் பரம்பல் வேறுபாடு
(இ) இலங்கையில் நீர்மாசடைதலுடன் தொடர்பான பிரச்சினைகள்

(12 ½ x 2 = 25 புள்ளிகள்)

*********